S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 341 03.06.2026 WEDNESDAY VAIKASI : 20 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 341 03.06.2026 புதன்கிழமை வைகாசி : 20 விலை : ரூ.5/–

## 'மெர்சல்' ரிலீஸுக்காக பழனிசாமி இல்லத்துக்கு ஊர்ந்து வந்தவர் விஜய்

# "தவெகவுக்கு அதிமுக பதிலடி!"

சென்னை: ஜூன்.3-

'2018 மே மாதம் நடந்த துப்பாக்கி சூடு பற்றி 2026 ல் ஃபோர்ஸ் ஆக கேள்வி கேட்கும் ஆச்சரியக்குறிகளை பார்த்ததுண்டா?. மெர்சல், மாஸ்டர் படங்கள் ரிலீஸ் ஆக வேண்டி அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் இல்லத்திற்கு ஊர்ந்து வந்த உங்கள் தலைவர் இதே கேள்வியைக் கேட்டிருக்கலாமே?' என அதிமுக தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அதிமுக ஐடி விங்க் வெளியிட்ட எக்ஸ் பதிவில், '2018 மே மாதம் நடந்த நிகழ்வு பற்றி 2026ல் ஃபோர்ஸ் ஆக கேள்வி கேட்கும் ஆச்சரியக்குறிகளை பார்த்ததுண்டா?. அவ்வளவு தில் இருந்தால், 'மெர்சல்', 'மாஸ்டர்' படங்கள் ரிலீஸ் ஆக வேண்டி அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் இல்லத்திற்கு ஊர்ந்து வந்த உங்கள் தலைவர் இதே கேள்வியைக் கேட்டிருக்கலாமே?' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, தவெக ஐடி விங்க் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூட்டுக்கு அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினரே. அப்போது அந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு



உத்தரவிட்டவர் யார்? காவல் துறை யார் கையில் இருந்தது? யாருக்கும் தெரியாமல் யாருடைய உத்தரவும் இல்லாமலே அவ்வளவு பெரிய துப்பாக்கிச் சூடு நடந்ததா? அப்போது முகத்தை மூடித் தூங்கியவர், முதல்வராக இருந்தாரா?

தமிழகமே அதிர்ந்து அலறிய அவ்வளவு பெரிய சம்பவத்தை டிவி பார்த்துத் தெரிந்துகொண்டதாக அப்போது சொன்னவர் யார்? தன்மானம், சுயமரியாதை பார்க்காமல் தவழ்ந்து சென்று முதல்வர் பதவியைத் தட்டிச் சென்றவர்தான் அவர் என்பது தமிழகம் அறியாததா?

எம்.ஜி.ஆரின் மக்கள் சக்தியை, ஜெயலலிதாவின் கட்டுப்பாடான தொண்டர்கள் கொண்ட சக்தியை யாரிடமோ அடகு வைத்து, மற்றும் பலர் கட்சியாக்கியவர், தீய சக்தி தி.மு.க.வுடன் சேர்ந்து தீர்ந்துபோன சக்தியாக்கியவர், உள்நோக்கத்துடன் விஷம் கக்குவதைத் தமிழக மக்கள் அறியாதவர்களா என்ன?

மக்கள் பாதிப்பைத் தன் பாதிப்பாக உணரும், மக்கள் விரும்பும் முதல்வரைத் தமிழகம் பெற்றுள்ளது. மக்கள் மீது அக்கறை கொண்டதால்தான் உடனடி நடவடிக்கையில் காவல் துறையை ஈடுபடச் செய்கிறார். சட்டம் ஒழுங்கைக் கட்டிக் காக்க, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபற்றி எதையும் அறிந்துகொள்ளாத மிஸ்டர் தீர்ந்துபோன சக்தி, அறியாமையில் அறிக்கை விட்டுக் கூவினால் எப்படி?

கட்சியைக் கலகலக்க வைத்து, அடகு வைத்துக் கரைத்து, அகில உலக அரசியல் கோர்ஸான கட்சியைக் காணாமல் போகச் செய்யும் கோர்ஸ் படித்தவர், அரசியல் பாடம் எடுத்தால் எப்படி?. தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டை டிவியில் பார்த்துத் தெரிந்துகொண்ட, தீர்ந்துபோன இந்தச் சக்தி, இப்போது டிவிகூட பார்க்காமல், தூர்ந்துபோன சக்தியுடன் ஆட்சி அமைக்கத் திருட்டுத்தனமாகக் கூட்டணி போட்டது போல, அவர்கள் எழுதிக் கொடுத்த அறிக்கையையும் தவழ்ந்துபோய்ப் பெற்று வந்து தன் பெயரில் வெளியிடுகிறாரா?

பெண்கள் பாதுகாப்பிலும், போதைப் பொருள் தடுப்பிலும், சட்டம் ஒழுங்கைக் காப்பதிலும் மனசாட்சி உள்ள மக்களாட்சியான எங்கள் வெற்றித் தலைவரின் ஆட்சி, தவறு செய்வோர் மீது கடுமையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்கும். மக்களுக்காகவே உழைக்கும்' எனத் தெரிவித்தது கவனிக்கத்தக்கது.

## "மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வம் இல்லை" : விஜய் அரசு மீது தமிழிசை சாடல்



சென்னை: ஜூன்.3-

"முதல்வர் விஜய் இன்னும் தேர்தல் பிரச்சார மூடில் இருந்து வெளியே வராதது மாதிரி தோன்றுகிறது. போர்க்கால அடிப்படையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு, மற்ற கட்சிகளிடமிருந்து ஆதரவை பெறுகின்ற ஆர்வம், மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதில் இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

திருவள்ளுவர் காவி நிறம்தான் உடுத்தியிருக்கிறார்; திருநீறு தான் வைத்திருந்தார். ஆரம்ப கால புத்தகங்கள் எல்லாம் இதைத்தான் உருவகப்படுத்தி இருக்கிறது. நூலகத்துக்கு சென்று பாருங்கள். 60, 70 வருடங்களுக்கு முன்னால் பதிப்பிக்கப்பட்ட திருவள்ளுவர் காவியுடை தான் அணிந்து இருக்கிறார். இதுதான் அசல்.

பாஜக மக்களால் நிராகரிக்கப்படவில்லை. ஒரு சின்ன பின்னடைவுதான். நிச்சயமாக நாங்கள் மீண்டு வருவோம். தமிழகத்தில் பாஜகவுக்கு தனி இடம் உண்டு. நாங்கள் மக்களுக்காக பேசுவர்கள். இன்று அரசியல் சூழல் மாறி யிருக்கிறது. முதல்வரே தோற்கக்கூடிய நிலை இருக்கிறது.

முதல்வர் விஜய் நேற்று திருச்சி சென்றிருந்தார். அவர் இன்னும் தேர்தல் பிரச்சார மூடில் இருந்து வெளிய வராத மாதிரி தோன்றுகிறது. முதல்வர் ஆகிவிட்டார்; மக்கள் உங்கள் வாய்ப்புகளை கொடுத்திருக்கின்றனர். போர்க்கால அடிப்படையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கத் தான் செய்வார்கள்" என்று அவர் கூறியுள்ளார்.

## அமித் ஷாவுடன் அண்ணாமலை சந்திப்பு பாஜகவில் இருந்து விலகுவது குறித்து விளக்கமா?



புதுடெல்லி: ஜூன்.3-

தமிழக பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை, டெல்லியில் பாஜக மூத்த தலைவரும், உள்துறை அமைச்சருமான அமித் ஷாவைச் சந்தித்துப் பேசினார். பாஜகவில் இருந்து தான் விலகுவதற்கான காரணம் குறித்து அவர் நேரில் விளக்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

அண்ணாமலை பாஜகவில் இருந்து விலக உள்ளதாக கடந்த சில நாட்களாக பேசப்பட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் (ஜூன் 1) செய்தியாளர்கள் இது குறித்து கேட்டபோது, 'இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். உட்கார்ந்து விரிவாகப் பேசுகிறேன். உங்கள் கேள்விகள் அனைத்துக்கும் பதில் சொல்கிறேன். நிச்சயம் இரண்டு நாட்களில் பேசுகிறேன்' என தெரிவித்தார்.

இதனிடையே, அவரது ஆதரவாளர்கள் 'தலைவா வா! தரணி ஆள வா!' என கோவை மாநகரின் பல பகுதிகளில் போஸ்டர்களை ஒட்டியுள்ளனர்.

இந்நிலையில், டெல்லியில் பாஜக தேசிய தலைவர் நிதின் நபினைச் சந்தித்துப் பேசிய அண்ணாமலை அதன் தொடர்ச்சியாக அமித் ஷாவை சந்தித்துப் பேசினார். பாஜக அமைப்பு பொதுச் செயலாளர் பி.எல். சந்தோஷையும் அவர் சந்தித்துள்ளார். மேலும், ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர்கள் சிலரையும் அவர் சந்தித்ததாகக் கூறப்படுகிறது.

பாஜகவில் இருந்து விலகுவதற்கான ராஜினாமா கடிதத்தை அண்ணாமலை இமெயில் மூலம் கட்சித் தலைமைக்கு ஏற்கெனவே அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்புகளின் போது, தனது முடிவுக்கான காரணங்கள் குறித்து அவர் விளக்கியதாகத் தெரிகிறது. எனினும், இது தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியாக வில்லை.

நிதின் நபின், பி.எல். சந்தோஷ், அமித் ஷா, ஆர்எஸ்எஸ் தலைவர்கள் அனைவருமே அவர் கட்சியில் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளனர். எனினும், தனது முடிவில் தான் உறுதியாக இருப்பதாக அவர் கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஜூன் 4ம் தேதி அண்ணாமலையின் பிறந்த நாள் என்பதால், அன்றைய தினம் புதிய அரசியல் கட்சியை தொடங்குவது குறித்த அறிவிப்பை அவர் வெளி யிடுவார் என அவரது ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

நடிகர் ரஜினிகாந்துக்கும் அண்ணாமலைக்கும் நல்ல நட்பு உள்ளது. அண்ணாமலை கட்சி தொடங்கினால் அதற்கு ரஜினிகாந்தின் வெளிப்படையான ஆதரவு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆன்மிகத்தையும் தேசியத்தையும் மையமாகக் கொண்டதாக புதிய கட்சி இருக்கும் என்றும், இது தமிழக அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இதனிடையே, தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரனை டெல்லிக்கு வருமாறு கட்சித் தலைமை அவசர அழைப்பு விடுத்துள்ளதாகவும், இதையடுத்து அவர் டெல்லிக்கு செல்ல உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மறுசீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்: ராமதாஸ்

சென்னை: ஜூன்.3-

தமிழக அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மீட்டெடுத்து, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தவெக அரசை பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளும் லட்சக் கணக்கான கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரத்துடன் நேரடியாக தொடர்புடையவை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் போதிய முதலீடு இல்லாமை, பழைய இயந்திரங்கள், காலிப் பணி யிடங்கள், குறைந்த பிழித்திறன் மற்றும் நிர்வாக அலட்சியம் காரணமாக முழுத் திறனுடன் செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இதன் நேரடி பாதிப்பை கரும்பு விவசாயிகளும், ஆலைத் தொழிலாளர்களும் சந்தித்து வருகின்றனர். கரும்புகளை



என்று தமிழ்நாடு உழவர் பேரியக்கத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

தமிழக அரசு தமிழகத்தில் கரும்பு உற்பத்தியை மேம்படுத்த: கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பதிவு செய்யப்பட்ட அனைத்து கரும்புகளும் முழுமையாக குறிப்பிட்ட நேரத்தில் வாங்கப்பட வேண்டும். கரும்பு பிழித்திறனை அதிகரிக்க உலகத் தரம் வாய்ந்த நவீன இயந்திரங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் நிறுவப்பட வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களும் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். கரும்பு விவசா

படுத்தியும் கூடுதல் வருவாய் ஈட்டப்பட வேண்டும்.

ஆலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் பயன் உள்ளூர் மக்களுக்கும், விவசா யிகளுக்கும் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். பல ஆண்டுகளாக விவசாய பங்கு தாரர்களுக்கு வழங்கப்படாமல் உள்ள லாபப் பங்குகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

கூட்டுறவு ஆலைகளில் ஈட்டப்படும் லாபத்தில் உரிய பங்கை பங்குதார விவசா யிகளுக்கு ஆண்டுதோறும் வெளிப் படையாக வழங்க வேண்டும். கரும்பு கொள்முதல் தொகைகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விவசாயிகளுக்கு கட்டாயமாக வழங்கப்பட வேண்டும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நிர்வாகத்தில் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வெறும் தொழிற்சாலைகள் அல்ல; அவை கிராமப்புற பொருளாதார வளர்ச்சியின் மையங்களாகும். இந்த ஆலைகளை நவீனமயமாக்குவதன் மூலம் கரும்பு விவசாயிகளின் வருமானம் உயர்வதோடு, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வேலை வாய்ப்பும் பாதுகாக்கப்படும். மேலும், தமிழ்நாட்டின் சர்க்கரை உற்பத்தித் திறன் தேசிய அளவில் முன்னுதாரணமாக மாறும்.

தமிழக அரசு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை மீட்டெடுத்து, விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு உழவர் பேரியக்கத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

## கருணாநிதியின் 103வது பிறந்தநாள்: அன்பகத்தில் மூவர் சிலைகளை திறக்கும் மு.க.ஸ்டாலின்!

சென்னை: ஜூன்.3-

கருணாநிதியின் 103 வது பிறந்தநாளையொட்டி, தேனாம்பேட்டை, அன்பகத்தில் 75 அடி உயர கம்பத்தில் திமுக கொடி ஏற்றப்படுகிறது. மேலும் பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் சிலைகளை திமுக தலைவர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

கருணாநிதியின் 103வது பிறந்த நாள் விழாவை திமுகவினர் நாளை கொண்டாடப்பட இருக்கிறார்கள். இந்நாளின் முக்கிய நிகழ்வாக, பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் சிலைகளை திமுக தலைவர் ஸ்டாலின் திறந்து வைக்கிறார்.

நாளைய தினத்தில் மு.க. ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள்:

8.00 மணி: கருணாநிதி நினைவிடத்தில் மரியாதை

8.15 மணி: சென்னை, அண்ணாசாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை

8.30 மணி: சென்னை, கோடம்பாக்கம் முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை

8.45 மணி: சென்னை, அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள கருணாநிதி சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை

9.30 மணி: சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில் 75 அடி உயர கம்பத்தில் கழகக் கொடி ஏற்றுதல், பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோர் சிலைகள் திறப்பு

## "தேவையற்ற திணிப்பு" 'வந்தே மாதரம்' குறித்த சசி தரூரின் விமர்சனமும், பாஜகவின் பதிலடியும்


புதுடெல்லி, ஜின்.3- அரசு விழாக்களில் 'வந்தே மாதரம்' பாடலின் அனைத்துச் சரணங்களையும் பாடுவது பார்வையாளர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தும் என காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் விமர்சித்துள்ளார். இதற்குப் பதிலடியாக, மத்திய அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது கட்டாயம் என பாஜக காட்டமாகத் தெரிவித்துள்ளது. புதுடெல்லியில் நடைபெற்ற ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் கலந்துகொண்ட நிகழ்வை நினைவு கூர்ந்த காங்கிரஸ் எம்.பி சசி தரூர், அந்த நிகழ்ச்சியின் தொடக்கத்திலும் முடிவிலும் 'வந்தே மாதரம்' பாடல் முழுமையாக இசைக்கப்பட்டதாகக் கூறினார். அதாவது, பார்வையாளர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்குப் பெரிதும்



பரிச்சயமில்லாத, நீண்ட நேரம் ஒலிக்கும் ஒரு பாடலுக்காக இரண்டு முறை எழுந்து நிற்பது சிரமமாகவே அமைந்தது என்று அவர் கூறினார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "'வந்தே மாதரம்' நமது தேசியப் பாடல், அதற்கு அனைவரும் மதிப்பளிக்கிறோம். ஆனால், ஒவ்வொரு நிகழ்ச்சியின் தொடக்கத்திலும் முடிவிலும் அதன் ஐந்து சரணங்களையும் முழுமையாக பாட வேண்டும் என்று மத்திய அரசு கட்டாயப்படுத்துவது தேவையற்ற ஒரு திணிப்பு. இந்த விவகாரத்தில் பாடலைப் பாடுவது ஒரு விருப்பத் தேர்வு (optional) என்ற நிலைப்பாட்டை கேரள முதல்வர் எடுத்துள்ளார். அதன் அடிப்படையில், பாடலை முழுமையாகப் பாடுவதைத் தவிர்க்கும் உரிமையை கேரளா பயன்படுத்தக் முடிவெடுத்துள்ளது" என்று அவர் கூறினார்.இதற்கு எதிர்வினையாற்றியுள்ள பாஜகவின் ஐடி பிரிவுத் தலைவரான அமித் மால்வியா, "அரசு நிகழ்ச்சிகளில் 'வந்தே மாதரம்' பாடலை முழுமையாகப் பாடுவது விருப்பத்திற்குரியது அல்ல. இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின்படி கட்டாயமானது. மாநில அரசுகள் இதில் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது. 'வந்தே மாதரம்' என்பது ஒரு அரசியல் கட்சி சார்ந்த முழக்கம் அல்ல; அது இந்தியாவின் தேசியப் பாடல்" என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இளம்பெண்ணுக்கு தவெக நிர்வாகிகள் கூட்டு பாலியல் வன்கொடுமை: நயினார், அண்ணாமலை கண்டனம்

சென்னை, ஜின்.3- வேலை வாங்கித் தருவதாக கூறி இளம் பெண்ணை தவெக நிர்வாகிகள் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ள சம்பவத்திற்கு எதிராக தமிழக பாஜக முன்னாள், இன்னாள் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். தமிழக பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள பதிவில்: "தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி இளம்பெண் ஒருவரை தவெக நிர்வாகிகள் இருவர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை புரிந்ததாக வெளி வந்துள்ள செய்தி மனதைப் பதைபதைக்கச்



செய்கிறது. ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக, லஞ்சம் கேட்பது, மாமூல் கேட்பது போன்ற குற்றங்களில் ஈடுபட்ட தவெகவினர் தற்போது கற்பழிப்பு, கொலை போன்ற கொடூரக் குற்றங்களில் ஈடுபட்டு மக்கள் பாதுகாப்பைச் சூறையாடி வருகின்றனர். இந்த லட்சணத்தில், முதல்வர் விஜய் பக்கம் பக்கமாக வசனம் பேசுவதை விடுத்து, முதலில் தான் வகிக்கும் பதவியின் பொறுப்பினை உணர்ந்து, தனது சொந்தக் கட்சியினரிடம் இருந்து தமிழக மக்களைக் காக்க வேண்டும்! அப்பொழுது தான் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கும்!" என்று நயினார் கூறியுள்ளார். தமிழக பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள பதிவில்: "தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த, தவெக தூத்துக்குடி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் ராமநாதபுரம் பகுதியை சேர்ந்த தவெக நிர்வாகி ஜெயபால் இருவரும் ஸ்ரீவைகுண்டம் பகுதியைச் சேர்ந்த இளம் பெண்ணை வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஏமாற்றி, கூட்டு பாலியல் வன்முறையில் ஈடுபட்டுள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. பெண்கள் பாதுகாப்பு குறித்துத் தேர்தல் பிரச்சாரத்தின் போது பேசிய தவெக தலைவர் விஜய், தனது கட்சியினரே குற்றச் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு என்ன பதில் வைத்திருக்கிறார் ? மாற்று அரசியல் என்று கூறி ஆட்சிக்கு வந்த தவெக, இன்று திமுகவின் பாதையிலேயே பயணிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. குற்றவாளிகள் இருவர் மீதும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும், இது போல பெண்கள் பாதுகாப்பு கவலைக்குள்ளாகும்படியான சம்பவங்கள் நடைபெறாதவாறு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும், தவெக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

## சென்னை - போலீஸ் என மிரட்டி மூதாட்டியிடம் பணம் பறித்த நபர் கைது

சென்னை, ஜின்.3- மூதாட்டியிடம் போலீஸ் என மிரட்டி பணம் பறித்த நபர் கைது செய்யப்பட்டார். புளியந்தோப்பு, திரு.வி.க. நகர் பகுதியைச் சேர்ந்தவர் பட்டம்மாள் (70). சென்னை துறைமுகத்தில் சுமார் 30 வருடங்களாக துப்புரவுப் பணி செய்து வருகிறார். இவர் கடந்த 30ம் தேதி மாலை துறைமுகத்தில் கொடுத்த 15 நாட்கள் சம்பள பணத்துடன், தனது பணம் சேர்த்து ரூ.11 ஆயிரத்தை சுருக்குப்பையில் வைத்து, அதை துணிகளுடன் ஒரு பையில் வைத்து எடுத்துக் கொண்டு 7வது நுழைவு வாயில் வழியாக வெளியே வந்து வீட்டுக்கு செல்வதற்காக நடந்து சென்று கொண்டிருந்தார்.அப்போது, அங்கு வந்த நபர் ஒருவர் பட்டம்மாளை மடக்கி, தன்னை போலீஸ் என அறிமுகம் செய்து கொண்டார். மேலும், மூதாட்டியிடம் நீங்கள் போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர் என சந்தேகமாக உள்ளது.எனவே, உங்களது உடைமைகளை சோதனை செய்ய வேண்டும் எனக் கூறி மூதாட்டியின் பையை வாங்கி சோதனை செய்தார். அப்போது, அதற்குள் இருந்த ரூ.11 ஆயிரத்தை எடுத்துக் கொண்டு, அந்த பணத்தை காவல் நிலையத்தில் வந்து பெற்றுச் செல்லுமாறு கூறி விட்டு அந்த நபர் தப்பிச் சென்றார். அதிர்ச்சி அடைந்த மூதாட்டி, துறைமுகம் காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் குறித்து தெரிவித்தார். அதன் பிறகுதான் வந்தது போலீஸ் அல்ல, வழிப்பறி கொள்ளையன் என்பது தெரிந்தது.இந்த விவகாரம் தொடர்பாக, போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்ததில், மூதாட்டியிடம் பணம் பறித்தது மண்ணடி அங்கப்பன் தெருவைச் சேர்ந்த வீராசாமி (40) என்பது தெரிந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த அந்த நபரை போலீசார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்

## பெண் காவலருக்கு பாலியல் தொந்தரவு: காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட்

தூத்துக்குடி, ஜின்.3- பெண் காவலருக்கு தவறான மெசேஜ் அனுப்பியதாக கூறப்பட்ட காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றியவர் திலீபன். இவர், கடந்த இரு தினங்களுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி காவல் நிலையத்துக்கு பணியிட மாறுதல் செய்யப்பட்டார். இன்னும் அங்கு சென்று பணியில் சேரவில்லை.இந்நிலையில், ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் பணியாற்றி தற்போது, சிங்கப்பெண் பாதுகாப்பு படைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள பெண் காவலர் ஒருவருக்கு வாட்ஸ்அப் மூலம் ஆய்வாளர் திலீபன் தவறான மெசேஜ் அனுப்பியதாகவும், இதனை தட்டிக்கேட்ட அந்த பெண் காவலரின் கணவருக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இதுதொடர்பாக துறைரீதியான விசாரணை நடத்த தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. அபிஷேக் குப்தா உத்தரவிட்டுள்ளார். அந்த் விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில், தன் மீதான புகாரை மறுத்து ஆய்வாளர் திலீபன் ஒரு வீடியோவை சமூக வலைதளங்களில் வெளியிட்டார். இதையடுத்து, ஆய்வாளர் திலீபனை தற்காலிக பணிநீக்கம் செய்து, திருநெல்வேலி சரக டிஐஜி தேஷ்முக் சேகர் சஞ்சய் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

## தென்மேற்கு பருவமழை எப்போது துவங்கும்..? வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட முக்கிய தகவல்

டெல்லி, ஜின்.3- நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை நாளை மறுநாள் அதாவது ஜூன் 4ஆம் தேதி வாக்கில் கேரளா மற்றும் தமிழகப் பகுதிகளில் தொடங்க அதிக வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) கூறி இருக்கிறது. கேரளத்தை மையமாக வைத்து வழக்கமாக ஜூன் 1ஆம் தேதி துவங்கும் தென்மேற்கு பருவமழை, நடப்பாண்டில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக சற்று தாமதமாக ஜூன் 4ஆம் தேதி துவங்க கூடும் என தெரிகிறது. அரபிக்கடல் பகுதிகள், லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் பருவமழை தீவிரமடைவதற்கேற்ற காற்று மற்றும் வளிமண்டல சூழல் நிலவுவதாக வானிலை மையம் கூறியிருக்கிறது.பருவமழை தொடங்குவதற்கு முன்பே




தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தற்போது கேரள நிலப்பரப்பில் தென்மேற்கு பருவமழை துவங்க சாதகமான சூழல் ஏற்பட்டிருப்பதாக IMD கூறியுள்ளது. மேலும் கேரளா மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளில் தென்மேற்கு பருவமழை விரிவடைய கூடும்.இதன் காரணமாக அடுத்த 67 நாட்களுக்கு, கேரளாவில் ஆங்காங்கே கனமழை முதல் மிகக் கனமழை வரையும் (720 செ.மி), தமிழகம் மற்றும் கர்நாடகாவில் ஆங்காங்கே கனமழையும் பெய்யவும் மிக அதிக வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது

## திருப்பதியில் நன்கொடையாக ரூ.1 லட்சம் செலுத்தினால் 5 விஜபி தரிசன டிக்கெட்

திருமலை, ஜின்.3- பச்சிளம் குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு இலவச இதய அறுவை சிகிச்சை செய்வதற்காக நன்கொடையாளர்களிடம் இருந்து நிதி திரட்டும் நோக்கில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் கடந்த 2022ம் ஆண்டு ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆபன்ன ஹிருதயாலயா திட்டத்தை தொடங்கியது. இந்த திட்டத்திற்கு ரூ.1 லட்சம் நன்கொடை அளித்தால், அடுத்த நாள் 5 பக்தர்களுக்கு விஜபி தரிசனம் வழங்கப்படும். ரூ.1 லட்சம் நன்கொடையுடன், டிக்கெட் விலையான ரூ.2,500ஐயும் செலுத்த வேண்டும். மேலும், இது குழந்தைகளின் சிகிச்சைக்கானது என்பதால், பக்தர்கள் இந்த அறக்கட்டளைக்கு நன்கொடை அளிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.அதன்படி பக்தர்கள் ஆபன்ன ஹிருதயாலயா திட்டத்தில் நன்கொடை செலுத்தி விஜபி தரிசனத்தில் சுவாமியை வழிபட்டு வருகின்றனர். இந்த டிக்கெட் பெற்ற பக்தர்கள் மாலை 4 மணியளவில் விஜபி தரிசனத்தில் அனுமதிக்கப்பட்டு மூலவருக்கு ஆரத்தி வழங்கி பிரசாதமாக வாழைப்பழம், தீர்த்தம், சடாரி ஆசிர்வாதம் ஆகியவை மூலவர் சன்னதியிலேயே வழங்கப்பட்டு வருகிறது

## இந்திய பங்குச்சந்தையை விஞ்சியது தென் கொரியா

இந்தியா, ஜின்.3- இந்திய நிறுவனங்களில் பங்கு விலை அடிப்படையிலான மொத்த சந்தை மதிப்பை விஞ்சியது தென்கொரிய பங்குச்சந்தை. தென் கொரிய நிறுவனங்களின் பங்கு விலை அடிப்படையிலான சந்தை மதிப்பு இவ்வாண்டு மட்டும் 86% உயர்ந்துள்ளது. சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் பங்குவிலை அதிகரிப்பால் அந்நிறுவன சந்தை மதிப்பு ரூ.95 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது



## சித்தூரில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் அளவீடு கற்கள் அகற்றம்

சித்தூர், ஜின்.3- சித்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள அளவீடு கற்கள் அகற்றப்பட்டு வருகிறது. இதுகுறித்து மாநகராட்சி திட்டத்துறை அதிகாரி நாகேந்திரா கூறியதாவது: மாநகராட்சி ஆணையர் நரசிம்ம பிரசாத் உத்தரவின் பேரில் அங்கீகாரம் பெறாத வீட்டுமனை பிரிவுகளை கண்டறிந்து அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, சித்தூர் இந்திராநகர் பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை ஆய்வு செய்தோம். அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் கட்டப்பட்ட குடியிருப்புகளை அடையாளம் கண்டு கற்களை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். மேலும் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள குடியிருப்புகளை முறைப்படுத்த விண்ணப்பிக்குமாறு வீட்டு மனை அமைப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளோம். ஆனால் அவர்கள் அங்கீகாரம் பெறாமல் இது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் மாநகராட்சி திட்டத்துறை சார்பில் மாநகரம் முழுவதும் ஆய்வு செய்து அங்கீகாரம் பெறாமல் இருக்கும் வீட்டுமனைகள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்

## செல்போனில் கிரிக்கெட் பார்த்துக் கொண்டிருந்தபோது இரும்பு நடைபாதை படிக்கட்டு சரிந்து ஜார்க்கண்ட் மாநில தொழிலாளி உயிரிழப்பு

சென்னை, ஜின்.3- இரும்பு நடைபாதை படிக்கட்டு சரிந்து விழுந்த விபத்தில் ஜார்க்கண்ட் மாநில தொழிலாளி உயிரிழந்துள்ளார். சென்னை மணப்பாக்கத்தில் உள்ள பிரபலமான கட்டுமான நிறுவனத்தில் வட மாநிலத்தைச் சேர்ந்த ஏராளமானோர் வேலை செய்து வருகின்றனர்.இவர்களில் 50க்கும் மேற்பட்டோர் ராமாபுரம் சாந்தி நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தகர இரும்பு செட்அறையில் தங்கியுள்ளனர்.இவர்களில் 40க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் இரவு முதல்மாடி இரும்பு படிக்கட்டில் சாய்ந்தபடி ஒரே நேரத்தில் தங்களது செல்போனில் ஐபிஎல் கிரிக்கெட் இறுதிப் போட்டியை நேரலையில் ரசித்துக் கொண்டிருந்தனர்.15 அடி உயரம்அப்போது எதிர்பாராத விதமாக இரும்பு பக்கவாட்டு கம்பி உடைந்தது. இதில், அனைவரும் 15 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தனர். ஒருவர் மீது மற்றொருவர் விழுந்ததால் பலருக்கு தலை, கை, கால் என உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது.தகவல் அறிந்து நந்தம்பாக்கம் போலீஸார் சம்பவ இடம் விரைந்து காயம் அடைந்த அனைவரையும் மீட்டு கிண்டி மற்றும் போரூரில் உள்ள மருத்துவமனைகளில் சேர்த்தனர். இவர்களில் ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பிரிஜ்சி மாஞ்சி (31) என்ற தொழிலாளி மட்டும் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். இந்த விவகாரம் தொடர்பாக நந்தம்பாக்கம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## மம்தாவுக்கு எதிராக 50 எம்எல்ஏக்கள் போர்க்கொடி திரிணமூல் காங்கிரஸில் பிளவு

கொல்கத்தா, ஜின்.3- "மம்தா பானர்ஜிக்கு எதிராக திரிணமூல் காங்கிரசின் 50 எம்எல்ஏக்கள் ஒன்றுபட்டுள்ளனர். அவர்கள் சட்டப்பேரவை திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறுவார்கள்" என்று அக்கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ரிஜூ தத்தா கூறியுள்ளார். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மூன்று முறை தொடர்ந்து ஆட்சியில் இருந்த திரிணமூல் காங்கிரஸை வீழ்த்தி பாஜக ஆட்சியமைத்தது. மேற்கு வங்கத்தில் பாஜக 208 இடங்களில் வென்ற நிலையில், திரிணமூல் காங்கிரஸ் 80 இடங்களை மட்டுமே பிடித்தது. இதனையடுத்து திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் வெளிப்படையாக பிளவு வெடித்துள்ளது.சமீபத்தில் நடந்த திரிணமூல் காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டத்தில் மொத்தமுள்ள 80 பேரில் 61 பேர் கலந்துகொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து திரிணமூல் காங்கிரஸ்



கட்சியின் சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவராக சோபன்தேப் சட்டோபாத்யாய் தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவரை தேர்வு செய்யும் கடிதத்தில் தாங்கள் கையெழுத்து இடவில்லை என்று தெரிவித்த சந்தீபன் சஹா மற்றும் ரிதப்ரதா பானர்ஜி ஆகியோரை அக்கட்சி நீக்கியது. இந்தப் போலி கையெழுத்து விவகாரம் குறித்து மேற்கு வங்க அரசு சிஐடி விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது. இதுபற்றி பேசிய ரிஜூ தத்தா, "மேற்கு வங்கத்தில் தற்போது மகாராஷ்டிரா பாணி அரசியல் சூழல் நிலவுகிறது. நாங்கள் திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டுள்ளோம். சுமார் 50 எம்எல்ஏக்கள் எங்கள் பக்கம் உள்ளனர். நாங்களே உண்மையான திரிணமூல் காங்கிரஸ் என்பதால், எதிர்க்கட்சித் தலைவராக ரிதப்ரதா பானர்ஜி இருப்பாரே தவிர, சோபன்தேப் சட்டோபாத்யாய் இருக்க மாட்டார். மேலும், அவர்களுக்கு பெரும்பான்மை உள்ளதால், கட்சியின் பெயரையும், சின்னத்தையும் தக்கவைத்துக்கொள்ள அவர்களையே அனுமதிக்க வேண்டும்" என்றார். 'தேர்தல் தோல்விக்குப் பிறகு திரிணமூல் தலைவர்கள் பலர் பாஜகவுக்கு மாறி வருகின்றனர். சிலர் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து வருகின்றனர். முறைகேடுகள் காரணமாக மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் கடந்த மாதம் 29ம் தேதி மறுவாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தொகுதியில் திரிணமூல் வேட்பாளராக போட்டியிட்ட ஜஹாங்கீர் கான் கடைசி நேரத்தில் தேர்தல் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.இதேபோல ஏராளமான திரிணமூல் தலைவர்கள் கட்சி நடவடிக்கைகளில் இருந்து விலகி வருகின்றனர். புதிய முதல்வர் சுவேந்து அதிகாரிக்கு சில திரிணமூல் எம்எல்ஏக்கள் பகிரங்கமாகவே ஆதரவு தெரிவித்து உள்ளனர். திரிணமூல் எம்பி ககோலி கோஷ் அண்மையில் கட்சியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகினார். முதல்வர் சுவேந்து அதிகாரியுடன் அவர் நெருக்கமாக உள்ளார். தற்போதைய சூழலில் திரிணமூல் காங்கிரஸுக்கு 28 மக்களவை எம்பிக்கள், 13 மாநிலங்களவை எம்பிக்கள் உள்ளனர். இதில் 20 எம்பிக்கள் பாஜகவுடன் தொடர்பில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளதும் கவனிக்கத்தக்கது. 2022ஆம் ஆண்டில் சிவசேனா கட்சி இரண்டு பிரிவுகளாக உடைந்தது. அதன் விளைவாக அப்போதைய உத்தவ் தாக்கரே தலைமையிலான 'மகா விகாஸ் அகாதி' கூட்டணி அரசு மகாராஷ்டிராவில் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது. சிவசேனாவின் பெரும்பான்மை எம்எல்ஏக்கள் ஏக்நாத் ஷிண்டே பக்கம் இருந்ததால், பாஜக ஆதரவுடன் அவர் முதல்வரானார். மேலும், கட்சியின் பெயர் மற்றும் சின்னமும் ஷிண்டேவுக்கே கிடைத்தது. அதே பாணியில் இப்போது திரிணமூல் காங்கிரஸில் பிளவு ஏற்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சட்டம் ஒழுங்கை பாதுகாக்க மு.வீரபாண்டியன் வலியுறுத்தல்

சென்னை, ஜீன்.3-
இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீர பாண்டியன் சென்னை யில் நேற்று செய்தியாளர் களிடம் கூறியதாவது: திருவள்ளுவருக்கு காவி உடை அணிவித்தது ஏற் புடையதல்ல.திருவள்ளுர் தமிழின் குறியீடு. அதை வலது பக்கம் திருப்பும் முயற்சியில் ஆளுநர் ஈடுபடகூடாது. கலாசார கூறுகளை ஆளுநர் மதித்து நடத்த வேண்டும், தமிழ் பன்பாடுகளை, 100 ஆண் டுகளாக கம்யூனிஸ்ட் கட் சிகள் குதிரை பேரம் என்ற



வார்த்தையை செவியில் கூட கேட்டதில்லை.இது மக்கள் அளித்த தீர்ப்பின் மீதான தாக்குதல். இதை நாங்கள் எதிர்க்கிறோம், கண்டிக்கிறோம். முதல் வர் கொடுத்த வாக்குறு திகளை நிறைவேற்ற காலம் எடுத்துக்கொள் ளலாம். ஆனால், சட்ட ஒழுங்கில் காலஅவகாசம் கூடாது.அரசு, அதிகாரி கள், காவல்துறை, பல ரகசிய பிரிவுகள் உள்ளன. அவை முடிக்கி விடப்பட வேண்டும். எந்த வகை யிலும் பாதுகாப்பற்ற சூழல் நிலவக்கூடாது.சட்ட ஒழுங்கில் கூடுதல் முயற் சிகளை அரசு எடுக்க வேண்டும். பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# “கழகத்திற்காக உயிர் கொடுத்த உத்தமர்!” உடுமலையில் அஇஅதிமுக சார்பில் K.A.S.மகேந்திரனுக்குக் கண்ணீர் அஞ்சலி!

உடுமலைப்பேட்டை, ஜூன்.3-
அ இ அ தி மு க பொதுச்செயலாளரும் முன்னாள் தமிழக முதல்வருமான எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்றத் தொகுதி அஇஅதிமுக சார்பில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. கழக வளர்ச்சிக்காகவும், கழக ஒற்றுமைக்காகவும் தன் உயிரைக் கொடுத்த உத்தமராகப் போற்றப்படும் தஞ்சை கிழக்கு மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் ரி.கி.ஷி.மகேந்திரன் அவர்களின் ஆன்மா சாந்தியடைய உடுமலை நகராட்சி அலுவலகம் முன்பு பிரம்மாண்ட



மௌன அஞ்சலி மற்றும் கண்ணீர் அஞ்சலி கூட்டம் நடைபெற்றது.உடுமலை நகர கழக அவைத்தலைவர் சாமி (எ) சிவராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, பொள்ளாச்சி தெற்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மு.இளஞ் செழியன் மற்றும் S.M. நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் ஹி.ரி.ரி.ராதாகிருஷ்ணன், வக்கீல் வேல்மணி, வக்கீல் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி செயலாளர் செல்வராஜ், பேரூர் கழக செயலாளர் நரிமுருகன், ஜாமின் ஊத்துக்குளி பேரூர் கழக செயலாளர் சுந்தர்ராஜ், கோலார்பட்டி அப்பு (எ) திருஞானம் சம்பந்தம், சிஞ்சுவாடி ஜெயக்குமார், வக்கீல் ரவிச்சந்திரன், பிளம்பர் நாச்சிமுத்து, ணிஙீ.விசி.இளங்கோவன், வெண்டர் அப்பாத்துரை, செல்வநாயகி, சந்திரிகா, நகர மன்ற உறுப்பினர் சௌந்தரராஜன், சின்னவீரம்பட்டி காளிமுத்து, ரங்கராஜ், ரவிக்குமார், பாண்டியன், ரவி, கொங்கு செல்வராஜ், சுப்பிரமணியன், பாப்பாத்தி, போட்டோ கணேஷ், வெள்ளிங்கிரி, மனோகரன், மகேந்திரன், சரஸ்வதி, ராஜசேகர், விமன், மாரிமுத்து, அபிநயா நாகராஜ், ஜெயசந்திரன், பழனிச்சாமி, முருகேசன், குணசேகரன், மணியன், திருமூர்த்தி, பண்ணைக்கிணறு கார்த்தி, எல்.ஐ.சி. சின்னச்சாமி, ஆட்டோ அசோக், சந்தை வேலாயுதம், முருகன் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் திரளாகக் கலந்துகொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

# ஈரானில் ரேடாரை தகர்த்த அமெரிக்க போர் விமானம்

டெஹ்ரான், ஜீன்.3-
அமெரிக்காவின் எம்க்யூ1 ரக ட்ரோனை ஈரான் சுட்டு வீழ்த்தியதற்கு பதிலடியாக, ஈரானின் வான் பாதுகாப்பு கருவிகள், தொலை தொடர்பு கோபுரங்களை அமெரிக்கப் படைதகர்த் தது.அமெரிக்காவின் எம்க்யூ1 ரக ட்ரோன் சர்வதேச கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட் டது. இதை ஈரான் சில நாட்களுக்கு முன்பு சுட்டு வீழ்த்தியது. ஈரான் வான் எல்லைக்குள் நுழைந்த தால் சுட்டு வீழ்த்தினோம் என ஈரான் கூறியது.இதற்கு பதிலடியாக ஈரானின் கோருக் மற்றும் கேஷ்ம் தீவு பகுதியில் உள்ள



வான் பாதுகாப்பு கருவி கள், தரைகட்டுப்பாட்டு மையங்கள், ஈரானின் சிரிக் தீவில் உள்ள தகவல் தொடர்பு கோபுரம் ஆகிய வற்றை அமெரிக்க போர் விமானம் கடந்த சனி மற் றும் ஞாயிற்று கிழமை களில் குண்டு வீசி தகர்த் தது.ஈரான் மீதான தாக் குதலை அமெரிக்கா தொடர்ந்தால், பதிலடி முற் றிலும் வேறுவிதமாக இருக் கும் என ஈரான் கூறியுள் ளது. ஈரான் அமெரிக்கா இடையே போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடந்தா லும், இது போன்ற தாக் குதல்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன.

# நாங்குநேரி அருகே மகளை கொன்றதாக பெற்றோர் கைது

திருநெல்வேலி, ஜீன்.3-
திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி அருகே தகாத உறவை கைவிட மறுத்த இளம்பெண் கொலை வழக்கில், அவரது பெற் றோரை போலீஸார் கைது செய்துள்ளனர்.திருநெல் வேலி மாவட்டம் நாங் குநேரி அருகே உள்ள செண்பகராமநல்லூரைச் சேர்ந்த விவசாயி சிவன், இவரது மனைவி வைரம் மாள். இவர்களது 3வது மகள் அமுதா (22). திருமணமாகவில்லை. இவருக்கும், அவரது உறவினரான திருமண மான இளைஞர் ஒருவருக் கும் பழக்கம் இருந்தது. அமுதாவை பெற்றோர் கண்டித்தனர். இதனால்



அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.இந்நிலையில், அமுதா தனது வீட்டில் தூக் கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக அவரது பெற்றோர் நேற்று முன் தினம் தெரிவித்தனர். மூலைக்கரைப்பட்டி போலீ ஸார் அமுதாவின் உடலை கைப்பற்றி பரிசோதனைக் காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத் துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.போலீஸார் விசாரணையில், அமுதா கொலை செய்யப்பட்டிருக் கலாம் என்று கிராம மக் கள் சந்தேகம் எழுப்பிய தாகத் தெரிகிறது. அமு தாவின் உடலில் காயங் கள் இருந்ததும் இதை ஊர்ஜிதப்படுத்தியது.
பிரேத பரிசோதனை அறிக் கையில், அமுதா விஷம் கொடுத்தும், கழுத்தை இறுக்கியும் கொலை செய் யப்பட்டது உறுதியானது. இதையடுத்து, சிவன், வைரம்மாள் ஆகியோரை போலீஸார் பிடித்து விசா ரித்தனர். விசாரணை யில் மகளை அவர்கள் கொலை செய்து விட்டு, தற்கொலை செய்ததாக நாடகமாடியது தெரிய வந்தது. இதையடுத்து அவர்களை போலீஸார் கைது செய்தனர்.

# குரூப் 2, 2ஏ தேர்வில் காலி பணியிடங்களை அதிகரிக்க தேர்வர்கள் கோரிக்கை

சென்னை, ஜீன்.3-
தமிழ்நாடு அனைத்து நிலை போட்டித் தேர்வாளர்கள் சங்கம் சார்பில் அதன் நிர்வாகிகள் நேற்று தலைமைச் செயலகத்தில் மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சரத்குமாரை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.அதன்பிறகு அச்சங்கத்தின் தலைவர் கலீல் பாஷா செய்தியாளர்களிடம் கூறியது: டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ 2025ம் ஆண்டு தேர்வுக்கான காலிப்பணி யிடங்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அனைத்து துறைகளிலும் உள்ள காலிப்பணியிடங்களை முழுமையாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனித ஆற்றல் மேம்பாட்டுத் துறை அமைச்சரை சந்தித்து மனு அளித்தோம்.எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அமைச்சரும் உறுதி அளித்தார். தமிழகம் முழுவதும் லட்சக்கணக்கான இளைஞர்கள் அரசுப் பணியை இலக்காகக் கொண்டு பல ஆண்டுகளாக கடுமையாக உழைத்து வருகின்றனர்.குறிப்பாக குரூப் 2 தேர்வுகளுக்காக ஆயிரக்கணக்கான தேர்வர்கள் தொடர்ந்து தயாராகி வரும் நிலையில், அறிவிக்கப் படும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து வருவது ஏமாற்றத்தை தருகிறது. கடந்த 2025ம் ஆண்டு தேர்வில் வெறும் 800 காலிப்பணி யிடங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டன.அரசுத் துறைகளில் பணியாளர் பற்றாக்குறை நிலவிவரும் சூழலில், காலிப்பணியிடங் களை ஆய்வு செய்து, 2025 குரூப் 2, 2ஏ மூலம் கூடுதல் பணியிடங்களை அறிவிப்பதன் மூலம் அரசின் நிர்வாகத் திறன்மேம்படுவதோடு, வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கும் பயன் அளிக்கும்.எனவே 2025 குரூப்2 தேர்வில் கூடுதல் காலிப்பணியிடங்களை உடனே அறிவித்து நிரப்புமாறு தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# இந்திய படையினரின் தீவிர கண்காணிப்பில் இருந்து தப்பிக்க தீவிர வாதிகளை அரசியல் கட்சியில் சேர அறிவுறுத்திய பாக். ஐஎஸ்ஐ

புதுடெல்லி, ஜீன்.3-
பாகிஸ்தான் உளவுப் பிரிவு மற்றும் அங்குள்ள தீவிரவாத அமைப்பு களுக்கு ஆதரவாக ஜம்மு காஷ்மீரில் பலர் பணி யாற்றுகின்றனர். இவர் களின் தீவிரவாத நடவடிக் கைக்குத் தேவையான அனைத்து பணிகளிலும் ஈடுபடுகின்றனர்.இந்நிலை யில் இதுபோல் செயல் படும் நபர்கள் சிலரை ஜம்மு காஷ்மீர் போலீஸார் சிலர் பிடித்தனர். அவர் களிடம் நடத்திய விசா ரணையில் பாகிஸ்தான் உளவுப்பிரிவு ஐஎஸ்ஐ அமைப்பின் பல சதி திட்டங்கள் அம்பலமாகி யுள்ளன. காஷ்மீரில் தீவிர வாத நடவடிக்கையில் ஈடு படும் நபர்களை தேசிய அரசியல் கட்சிகளில் சேர்ந்து உறுப்பினர் அட்டை பெறும்படி பாகிஸ் தான் ஐஎஸ்ஐ அறிவுறுத் தியுள்ளது. அப்போதுதான் சோதனைச் சாவடிகளில்



தீவிர சோதனைக்கு உட்படாமல் எளிதில் தப்பிக்கலாம், ஆயுதங் களை எளிதாக கடத்திச் செல்லலாம் என கூறியுள் ளனர்.இதுகுறித்து முன் னாள் டிஜிபி எஸ்.பி.வைத் கூறும்போது, ‘‘இதுபோன்ற சதித் திட்டங்கள் பாது காப்புப் படையினரின் கண் காணிப்பில் இருந்து தப் பிக்க ஓரளவு உதவலாம். சோதனையின்போது அரசி யல் கட்சிகளின் உறுப் பினர் அட்டைகள் பாது காப்பு கேடயமாக விளங் குகிறது.இதுபோல் தீவிர வாதிகள் ஆயுதங்களை கடத்தியபோது அரசியல் கட்சி உறுப்பினர் என்ற அடையாள அட்டைகளை காட்டிய சம்பவம் இதற்கு முன்பும் நடைபெற்றுள் ளது’’ என்றார். பாது காப்பு படையினர் மேற் கொள்ளும் தீவிர தேடுல் வேட்டையில் காஷ்மீரில் செயல்படும் பல தீவிரவாத அமைப்புகளின் கமாண்டர் கள் பலர் கொல்லப்பட்டுள் ளனர். இதனால் தீவிரவாத நடவடிக்கைக்கு உதவும் நபர்களை அரசியல் கட் சிகளில் இணையும்படி ஐஎஸ்ஐ அறிவுறுத்தியுள் ளதாக தெரிகிறது.

# “மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வம் இல்லை” விஜய் அரசு மீது தமிழிசை சாடல்

சென்னை, ஜீன்.3-
“முதல்வர் விஜய் இன்னும் தேர்தல் பிரச்சார மூடில் இருந்து வெளியே வராதது மாதிரி தோன்றுகிறது. போர்க்கால அடிப்படையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்” என பாஜக மூத்த தலைவர் தமிழிசை கூறியுள்ளார்.இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, “விஜய் தலைமை யிலான தவெக அரசுக்கு, மற்ற கட்சிகளிடமிருந்து ஆதரவை பெறுகின்ற ஆர்வம், மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதில் இல்லையோ என எண்ணத் தோன்றுகிறது.திருவள்ளுவர் காவி நிறம்தான் உடுத்தியிருக்கிறார்; திருநீறு தான் வைத்திருந்தார்.



ஆரம்ப கால புத்தகங்கள் எல்லாம் இதைத்தான் உருவகப்படுத்தி இருக்கிறது. நூலகத்துக்கு சென்று பாருங்கள். 60, 70 வருடங்களுக்கு முன்னால் பதிப்பிக்கப்பட்ட திருவள்ளுவர் காவியுடை தான் அணிந்து இருக்கிறார். இதுதான் அசல்.பாஜக மக்களால் நிராகரிக்கப்படவில்லை. ஒரு சின்ன பின்னடைவுதான். நிச்சயமாக நாங்கள் மீண்டு வருவோம். தமிழகத்தில் பாஜகவுக்கு தனி இடம் உண்டு. நாங்கள் மக்களுக்காக பேசுவர்கள். இன்று அரசியல் சூழல் மாறியிருக்கிறது. முதல்வரே தோற்கக்கூடிய நிலை இருக்கிறது. முதல்வர் விஜய் நேற்று திருச்சி சென்றிருந்தார். அவர் இன்னும் தேர்தல் பிரச்சார மூடில் இருந்து வெளிய வராத மாதிரி தோன்றுகிறது. முதல்வர் ஆகிவிட்டார்; மக்கள் உங்கள் வாய்ப்புகளை கொடுத்திருக்கின்றனர். போர்க்கால அடிப்படையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கத் தான் செய்வார்கள்” என்று அவர் கூறியுள்ளார்.

# பயிர்க்கடன் தள்ளுபடியால் 80% விவசாயிகள் பலன் அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

சென்னை, ஜீன்.3-
பயிர்க்கடன் தள்ளுபடி குறித்து மின்சாரத்துறை அமைச்சர் நிர்மல்குமார் விளக்கமளித்துள்ளார். மின்வாரியத்தில் என்னென்ன பிரச்சனைகள் உள்ளன என்பதை தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பயிர்க்கடன் தள்ளுபடியால் 80% விவசாயிகள் பலன் அடைந்துள்ளனர் என்று நிர்மல்குமார் கூறியுள்ளார்



# அரசு ஊழியர்களுக்கு பயோமெட்ரிக் வருகைப்பதிவு அமல்


சென்னை, ஜீன்.3-
தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் மனிதவளத் துறை அரசுப் பணியாளர் களுக்கு முக அடையாள பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை அமல்படுத் தப்பட்டுள்ளது.சென்னை புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் உள்ள தலை மைச் செயலகத்தில் முதல் வர், அமைச்சர்களின் அலுவலகங்கள் உள் ளன. மேலும், நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டிடத் தில் 54 துறை செயலர் கள், பல்வேறு நிலைகளில் உள்ள அதிகாரிகள் என 5 ஆயிரத்துக்கும் மேற் பட்டோர் பணியாற்றிவரு கின்றனர்.இவர்களுக்கு காலை 10 முதல் மாலை 5.45 மணி வரை அலுவல் பணி நேரமாக உள்ளது. இதற்கிடையே சிற்றுண் டி, உணவு இடைவேளை யும் வழங்கப்படுகிறது.இந் நிலையில், தலைமைச் செயலகத்தில் மனிதவளத் துறையில் பணிபுரியும்



பணியாளர்களுக்கு முக அடையாள பயோமெட் ரிக் வருகைப் பதிவு முறை நேற்று முதல் அமல்படுத் தப்பட்டது.இதற்கான பயோமெட்ரிக் மற்றும் முகம் காணும் தொடுதிரை இயந்திரம் அலுவலக முகப்பில் நிறுவப்பட்டுள் ளது. இதையடுத்து துறை அலுவலர்கள், பணியாளர் கள் தங்களின் வருகையை பதிவுசெய்ய பயோமெட்ரிக் முறையை கடைப்பிடிக்க வேண்டுமென கட்டாயமாக் கப்பட்டுள்ளது.அதன்படி, காலை வழக்கம்போல் அலுவலகம் வருகை தந்த மனித வளத்துறை பணி யாளர்கள் தங்களின் வரு கையை புதிய நடைமுறை யின்படி பதிவுசெய்தனர். இதைத் தொடர்ந்து மற்ற துறைகளுக்கும் விரை வில் பயோமெட்ரிக் வரு கைப்பதிவு திட்டத்தை விரிவுபடுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளதாக கூறப் படுகிறது.கடந்த ஆட்சி யில் பயோமெட்ரிக் முறை அமலான போது தலை மைச் செயலக பணியாளர் சங்கம் கடும் எதிர்ப்பு தெரி வித்ததால் அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# இசைஞானி இளையராஜா பிறந்தநாள்: முதல்வர் விஜய் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

சென்னை, ஜீன்.3-
இசைஞானி இளையராஜாவின் பிறந்த நாளுக்கு முதல்வர் விஜய் உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளனர்.தமிழக முதல்வரும் தவெக தலைவருமான விஜய் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: ”தேனி மாவட்டம், பண்ணைப் புரம் என்ற கிராமத்தில் பிறந்து, தனது சகோதரர்களுடன் இசைப் பயணத்தைத் தொடங்கி, “அன்னக்கிளி” என்ற திரைப் படத்தின் மூலமாக திரைத் துறையில் கால் பதித்து, உலகப் புகழ்வாய்ந்த சிம்பொனி இசை வரை பல சாதனைகளைப் படைத்து, இசை உலகின் மகுடமாகத் திகழ்ந்து வரும் இசைஞானி இளையராஜா தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகிறார். உங்கள் இசை இன்னும்



பல தலைமுறைகளுக்கு வழிகாட்டும் ஒளியாகவும், ஊக்கமாகவும் தொடர்ந்து ஒலிக்கட்டும். தமிழர்களின் பெருமையாக விளங்கும் தங்களுக்கு எங்களின் அன்பும், மரியாதையும் கலந்த இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்!” என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: “இசையால் நம்மை என்றென்றும் ஆளும் இசைஞானிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!. கருணாநிதி மீது கொண்ட மதிப்பின் காரணமாகத் தனது பிறந்த நாளையே ஒரு நாள் முன்னதாக மாற்றிக் கொண்டவர்.‘இசைஞானி’ என்று கருணாநிதி பட்டம் சூட்டினார். அன்னக்கிளியில் தொடங்கி சிம்பொனி வரையிலான ராஜாவின் ராஜாங்கம் தொடரட்டும். ராஜா என்றும் ராஜாதான்!” என்று ஸ்டாலின் கூறியுள்ளார். பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: “எங்களின் இசை மருத்துவரும், உலகின் தலை சிறந்த இசையமைப்பாளருமான இசைஞானி இளையராஜா 84ம் பிறந்த நாளை இன்று கொண்டாடும் நிலையில், அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரி வித்துக் கொள்கிறேன். இசைஞானியின் தனிச் சிறப்பு என்னவென்றால், தாய், தந்தை, குடும்பத்தினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரையும் விட, இசையாய் மிக அதிக நேரம் ஒவ்வொருவருடனும் இணைந்திருப்பது தான். இளைய ராஜா படைப்புகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மன சஞ்சலங்கள், மன அழுத்தங்கள் உள்ளிட்ட அனைத்து சிக்கல்களுக்கும் இலவச மருத்துவமாக அமைவது அவரது இசை தான். இசைஞானியின் இசைத் தொண்டு காலங்களைக் கடந்து தொடர வேண்டும். இசைஞானி நூற்றாண்டுகளைக் கடந்து வாழ்ந்து இசையால் இனிவரும் தலைமுறைகளையும் மகிழ்விக்க வேண்டும்” என்று அன்புமணி கூறியுள்ளார்.அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளி யிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: “இசை உலகின் ஈடு இணையற்ற மாமேதையாகவும், கோடிக் கணக்கான மக்களின் மனங்களை தன் உணர்வுப்பூர்வமான இசையால் ஆட்கொண்டிருப்பவருமான இசைஞானி இளையராஜாவின் பிறந்த தினம் இன்று. கிராமிய இசையில் தொடங்கி மேற்கத்திய இசை வரை தன்னுடைய தனித்திறமையால் கோலோச்சி, காலம் கடந்தும் நிற்கும் காவியங்களைப் படைத்துக் கொண்டிருக்கும் இசைஞானி இளையராஜா, நீண்ட ஆயுளோடும், பூரண உடல் நலத்தோடும் தனது இசையால் மக்களை மகிழ்விக்க வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்” என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.



## புதுச்சேரியில் பிரம்மாண்ட வால்கத்தான்!”மக்கள் தொகை கணக்கெடுப்பு விழிப்புணர்வு பேரணி

புதுச்சேரி, ஜூன்.3-
புதுச்சேரி மாநிலம் முழுவதும் வீடு வீடாகச் சென்று மக்கள் தொகை கணக்கெடுக்கும் பணி நேற்று (01.06.2026) திங்கள்கிழமை முதல் விறுவிறுப்பாகத் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக, இக்கணக்கெடுப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் புதுச்சேரி கடற்கரைச் சாலை மஹாத்மா காந்தி சிலையிலிருந்து பிரம்மாண்டமான விழிப்புணர்வு நடைபயண நிகழ்வு நடைபெற்றது. மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரி திரு. சுந்தரேஷ் பாபு, இ.ஆ.ப. மற்றும் மாவட்ட ஆட்சியரும் முதன்மை மக்கள் தொடர்பு அதிகாரியுமான திரு. குலோத்துங்கன் அ, இ.ஆ.ப. ஆகியோர் கூட்டாகத் தலைமை ஏற்று, கொடியசைத்து இந்த நடைபயணத்தைத் துவக்கி வைத்ததோடு தாங்களும் பேரணியில் கலந்து கொண்டனர். இப்பேரணியில் 200க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி, சீருடை மற்றும் தொப்பிகள் அணிந்து முக்கிய வீதிகள் வழியாகச் சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். மேலும், இம்மாபெரும் நிகழ்வில் மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பலரும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



■ சேலம் இளந்தளிர் சமூக சேவை நண்பர்கள் குழு மற்றும் தமிழ்நாடு பஸ் பயணிகள் நல சங்கத்தின் சார்பிலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் ஆ.பார்த்திபன் அவர்களுக்கு, பொன்னாடை போற்றி வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில், இளந்தளிர் சமூக சேவை நண்பர்கள் குழு தலைவர் மற்றும் தமிழ்நாடு பஸ் பயணிகள் நல சங்கத்தின் மாநில சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் செவ்வை சுதன் தலைமை தாங்கினார் மற்றும் நிர்வாகிகள் யுவராஜ், ஜனனி, சான்வாஸ், கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.



## “500க்கும் மேற்பட்ட பங்காளிகள் திரண்ட மல்லூர் வேங்கம்பட்டி காட்டுக் கோயிலில் மகா முப்பூசை!

சேலம், ஜூன்.3-
சேலம் மல்லூர் வேங்கம்பட்டியில் அமைந்துள்ள புகழ்பெற்ற காட்டுக் கோயிலில், ஐய்யனாரப்பன், வேட்டைக்காரன், பெருமாள், பெரியாண்டிச்சியம்மன் மற்றும் கன்னிமார்கள் குலதெய்வ முப்பூசை தெவ வழிபாடு வெகு விமரிசையாக நடைபெற்றது.இக்கோயிலில், பாரம்பரியமாக ஐந்து தலைக்கட்டுகளாக வீர வன்னியர் சமூகத்தினரால் குலதெய்வ பூஜை வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு நடைபெற்ற குலதெய்வ தெவ பூஜையில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 500க்கும் மேற்பட்ட பங்காளிகள் தங்களது குடும்பத்தினருடன் திரளாகக் கலந்து கொண்டனர். விழாவை முன்னிட்டு ஐய்யனாரப்பன், வேட்டைக்காரன், பெரியாண்டிச்சியம்மன், கன்னிமார்கள் மற்றும் பெருமாளுக்குச் சிறப்புப் அபிஷேகங்களும், அலாதியான பூஜை அலங்காரங்களும் செய்யப்பட்டு, மகா தீபாராதனை நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். அதனைத் தொடர்ந்து, விழாவின் முக்கிய நிகழ்வான முப்பூசை தெவ வழிபாடு பக்திப் பரவசத்துடன் நடைபெற்றது.



■ புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தில், வரவிருக்கும் பயிற்சி முகாம் தொடர்பாக மாநில நிர்வாகிகள் மற்றும் நிகழ்ச்சிப் பொறுப்பாளர்களுடன் நடைபெற்ற முக்கிய கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனை மேற்கொண்டனர். பயிற்சி முகாமை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

## “அக்னி குண்டத்தில் இறங்கிய 10,000 பக்தர்கள்!” சிவகிரி திரௌபதி அம்மன் கோயில் பூக்குழி திருவிழா!

சிவகிரி, ஜூன்.3-
தென்காசி மாவட்டம் சிவகிரியில் மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு திரௌபதி அம்மன் ஆலயத்தின் ஆண்டு பூக்குழித் திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சூழ வெகுவிமரிசையாக நடைபெற்றது.கடந்த மே 23 சனிக்கிழமை அன்று கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்த 10 நாள் திருவிழாவில், தினசரி பல்வேறு சமுதாயத்தினர் மற்றும் அமைப்புகள் சார்பில் மண்டகப்படி திருவிழாக்களும், கிருஷ்ணன், அர்ஜுனன், திரௌபதி அம்மனுக்குச் சிறப்பு அபிஷேக அலங்கார பூஜைகளும் நடைபெற்றன. விழாவின் முக்கிய நிகழ்வுகளான மாங்கனி பறித்தல், திருக்கல்யாணம், அர்ஜுனன் தபசு, அரவான் களப்பொலி, மற்றும் துச்சாதனன் பழிவாங்குதல் ஆகிய வரலாற்று புராண வடிவ அலங்காரங்கள் வீதி உலா வந்து மக்களைப் பரவசப்படுத்தின. பெண்கள், ஆண்கள், மற்றும் குழந்தைகள் கைகளில் தீப்பந்தங்களுடன் "கோவிந்தா... கோவிந்தா..." என முழக்கமிட்டு அக்னி குண்டத்தில் இறங்கித் தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர். இத்திருவிழாவில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திரண்டதால், புளியங்குடி டிஎஸ்பி மதன் தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்பும், தீயணைப்பு மற்றும் வருவாய்த்துறை வசதிகளும் செய்யப்பட்டிருந்தன.இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் கணேஷ் குமார், காப்பு கட்டும் பக்தர்கள் சங்கத் தலைவர் சங்கர் கணேசன், செயலாளர் ஆறுமுகம், பொருளாளர் முத்துராமன், துணைத் தலைவர் சக்திவேல், துணைச் செயலாளர் திருப்பதி, தண்டல் காளிமுத்து மற்றும் அனைத்து மண்டபதாரர்களும் இந்த பிரம்மாண்ட ஆன்மீக விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்புடன் செய்திருந்தனர்.



## சவுக்கு சங்கர் மீதான வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நீதிமன்றம் இடைக்கால தடை

சென்னை, ஜூன்.3-
பிரபல யூடியூபரான சவுக்கு சங்கர் மீதான கொலை முயற்சி வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய இடைக்காலத் தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.சவுக்கு மீடியா சிஇஓ வான யூடியூபர் சவுக்கு சங்கர் மீது சைதாப்பேட்டை மற்றும் ஆதம்பாக்கம் போலீஸார் பதிவு செய்திருந்த இரு குற்ற வழக்குகளில் அவருக்கு உயர் நீதிமன்றம் நிபந்தனை ஜாமீன் வழங்கியிருந்தது.ஆனால். அவர் ஜாமீன் கெடு முடிந்த பிறகும் நீதிமன்றத்தில் சரணடையவில்லை என்பதால் அவரை போலீஸார் ஆந்திராவில் வைத்து கடந்த ஏப்.8ம்தேதி கைது செய்து புழல் சிறைக்கு கொண்டு வந்தனர்.போலீஸ் வாகனம் புழல் அருகே வந்த போது மற்றொரு வாகனத்தில் அங்கு வந்த 4 பேர் போலீஸாருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு, அவர்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது.இது தொடர்பாக சவுக்கு சங்கர் உள்ளிட்டோர் மீது கொலை முயற்சி உட்பட பல்வேறு பிரிவுகளின்கீழ் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். தன் மீது போடப்பட்டுள்ள இந்த பொய் வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் சவுக்கு சங்கர் மனு தாக்கல் செய்திருந்தார்.இந்த மனு நீதிபதி எம்.நிர்மல் குமார் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கில் பதிலளிக்க அரசு தரப்பில் அவகாசம் கோரப்பட்டது. அதையேற்ற நீதிபதி, விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.அதுவரை இந்த வழக்கில் போலீஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யக் கூடாது என இடைக்கால தடை விதித்துஉத்தரவிட்டுள்ளார்.



## குடியிருப்பு பகுதியில் உலாவிய யானை கூட்டம்: குமரியில் காலை பரபரப்பு

நாகர்கோவில், ஜூன்.3-
கன்னியாகுமரி மாவட்டம் அருமனை அருகே இன்று காலை குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த யானை கூட்டத்தை வனத்துறையினர் பட்டாசு வெடித்து விரட்டினர். அப்போது யானைகள் தனித்தனியாக பிரிந்து சென்றதால் மக்கள் பீதியடைந்துள்ளனர். கன்னியாகுமரி மாவட்டம் அருமனை அருகே கடையால்மூடு பேரூராட்சிக்கு உள்பட்ட மருதம்பாறை பகுதியில் ரப்பர் தோட்டங்கள், 200க்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடுகள் உள்ளன. இதற்கிடையே இன்று காலை சுமார் 6.30 மணிக்கு யானைகள் கூட்டமாக ரப்பர் தோட்டத்தில் உலாவிக் கொண்டு இருந்தன.
இதை அந்த பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவர் பாஹின் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து வனத்துறையினருக்கு பொதுமக்கள் தகவல் கொடுத்தனர். இதையடுத்து வனசரகர் முகைதீன் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். பின்னர் பட்டாசுகள் வெடித்து யானை கூட்டத்தை காட்டுக்குள் விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது யானைகள் திசைக்கொன்றாக தனித்தனியாக பிரிந்து சென்றன



## தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் நியமனம்

சென்னை, ஜூன்.3-
தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக் கழகத்தின் பொறுப்பு துணைவேந்தராக எஸ்.புஷ்கலா நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை, கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் பல்கலைக்கழகம் கடந்த 1987ம் ஆண்டு தொடங்கப்பட்டது.இப்பல்கலைக்கழகத்தின் 11வது துணைவேந்தராக மருத்துவர் கே. நாராயணசாமி கடந்த 2023ம் ஆண்டு தமிழக ஆளுநரால் நியமிக்கப்பட்டார். துணைவேந்தரின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும்.இந்நிலையில், நாராயணசாமியின் பதவிக் காலம் கடந்த மே 31ம் தேதியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து, பல்கலைக்கழகத்தின் நோய் எதிர்ப்பியல் துறைத் தலைவர் மருத்துவர் எஸ்.புஷ்கலாவை பொறுப்பு துணைவேந்தராக செயல்பட மருத்துவ பல்கலைக் கழக ஆட்சி மன்றக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.அதன்படி, நேற்று அந்த பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். புதிய துணைவேந்தரை தேர்வு செய்ய அரசு தரப்பில் தற்போது தெரிவுக் குழு அமைக்கப்பட வேண்டும்.அக்குழுவின் ஒருங்கிணைப்பாளரை அரசே நியமிக்க வேண்டும். அதில், உறுப்பினர்களாக செயல்பட, பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழு சார்பில், முன்னாள் துணை வேந்தர் மருத்துவர் சாந்தராமன் முன்மொழியப்பட்டுள்ளார்.செனட் குழு சார்பில், நரம்பியல் மருத்துவர் டாக்டர் கே.செல்வகுமார் உறுப்பினராக உள்ளார். அரசு சார்பில் ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டதும், அக்குழுவினர், தகுதியானவர்களிடம் விண்ணப்பங்களை பெற்று பரிசீலனை செய்வார்கள்.குறைந்தபட்சம் 3 பேரை பரிந்துரை செய்து பல்கலைக்கழகத்தின் வேந்தரான ஆளுநரின் பரிசீலனைக்கு அனுப்புவார்கள். அவர்களில் ஒருவரை நேர்முக தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து துணைவேந்தராக ஆளுநர் நியமிப்பார்.3 மாதங்களுக்குள் இந்த நடைமுறைகள் நிறைவடைய வேண்டும். அப்படி இல்லை என்றால், பல்கலைக்கழகத்தை நிர்வகிக்க சிறப்பு குழுவை அரசு அமைக்கலாம்.

## வானத்துக்கும் பூமிக்கும் குதிக்காதீர்கள் தம்பி விஜி: முதல்வருக்கு ஆர்பி உதயகுமார் அட்வைஸ்

மதுரை, ஜூன்.3-
அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் இன்று வெளியிட்ட வீடியோவில் பேசியிருப்பதாவது: தமிழகத்திற்கு எந்த உழைப்பும் கொடுக்காமல், எந்த போராட்டத்தையும் முன் எடுக்காமல், தேர்தல் களத்தை சந்தித்து தம்பி விஜி அதிகாரத்துக்கு வந்துள்ளீர்கள். இப்போது வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கிறீர்கள். இளைய தலைமுறையினருக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு நீங்கள் என்னதான் வழி காட்டினீர்கள்? சிறு வயது முதல் சினிமாத் திரைப்படங்களில் நடித்து, அதன்மூலம் தனியாக விமானத்தில் பயணம் செய்யும் அளவுக்கு உங்கள் பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டீர்கள். தமிழ்நாடு மக்களுக்கு என்ன தியாகம் செய்தீர்கள்?தமிழ்நாடு செய்திகள்திருச்சியில் நன்றி அறிவிப்பிற்கு வந்தீர்கள் சரி. அந்த மக்களுக்கு நீங்கள் சொன்ன செய்தி என்ன? மேகதாது பிரச்னை உள்ளது. பயிர்க்கடன் பிரச்னையில் விவசாயிகள் போராட்ட களத்தில் உள்ளார்கள். பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருக்கிறது. மின்சாரத் தடை, போதைப்பொருள் நடமாட்டம் உள்ளது. இதையெல்லாம் 25 நாட்களில் சீர்செய்ய வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. இதற்கு எல்லாம் தீர்வு காண என்ன திட்டம் உள்ளது என்பதை சொல்ல வேண்டாமா?இன்னும் நடிகராக தமிழ்நாட்டு மக்களிடத்தில் நடித்துக் கொண்டே இருந்தால், எப்போது முதல்வராக பொறுப்பேற்க போறீங்க? முதல்வர் என்பதை மறந்து, நடிகராகவே விமர்சனம் செய்கிறீர்களே? அதிமுகவை கிள்ளுக்கீரையாக நினைத்து தொடர்ந்து விமர்சனம் செய்து வருகிறீகள். அதிமுகவை அழிக்க நினைக்கிறீர்கள். உங்கள் ஆணவம், அகம்பாவம் பேச்சு மூலம் தெரியுது தம்பி. அதிமுகவின் சிங்கக்கூட்டம் சிலிர்த்து எழுந்து, உங்களை செதில், செதிலாக்கும் காலத்தை உருவாக்குவார்கள்.
இவ்வாறு அவர் பேசியுள்ளார். இன்னும் நடிகராகவே இருக்கீங்க... எப்போது முதல்வராக பொறுப்பேற்க போறீங்க?

## மே மாதத்தில் உச்சம்: யுபிஐ பரிவர்த்தனை ரூ.30 லட்சம் கோடி

புதுடெல்லி, ஜீன்.3-
இந்தியாவில் யுபிஐ பரிவர்த்தனை மதிப்பு மற்றும் எண்ணிக்கை இரண்டிலும் இதுவரை இல்லாத புதிய சாதனையை எட்டி உள்ளது. இதுதொடர்பாக இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (என்பிசிஐ) நேற்று வெளியிட்ட அறிக்கையில், ‘மே மாதத்தில் யுபிஐ மூலம் ரூ.29.90 கோடி மதிப்பிலான 2,320 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. இது முந்தைய மாதத்தின் 2,235 கோடி பரிவர்த்தனைகள் மற்றும் ரூ.29.03 லட்சம் கோடி என்ற புள்ளிவிவரங்களை விட அதிகமாகும். கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூ.25.14 லட்சம் கோடி மதிப்பிலான பரிவர்த்தனைகள் நடந்திருக்கின்றன. இத்துடன் ஒப்பிடுகையில் 19 சதவீத வளர்ச்சியை எட்டி உள்ளது. கோடைக்கால சுற்றுலா பயணங்கள், ஐபிஎல் கிரிக்கெட் தொடர் மற்றும் பண்டிகை கால செலவுகள் ஆகியவை பரிவர்த்தனை அதிகரிப்பிற்கு முக்கிய காரணம்’ என கூறப்பட்டுள்ளது








**உயர்திரு. ஆணையாளர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி.**
**ந.க.எண்: எச்1/ 01419 / 2025**

ஆனந்தி (வயது45)
க/பெ.நஞ்சப்பன் (வயது 55)
822/10K,போயம்பாளையம் பிரிவு,
பிச்சம் பாளையம் புதூர்,
P.N.ரோடு,
திருப்பூர் 641601

மனுதாரர்....

அறிவிப்பு

மேற்படி நம்பரில் மனுதாரர் திருமதி ஆனந்தி க/பெ. நஞ்சப்பன் அவர்கள் தமது தந்தை திரு. லிங்கசாமி த/பெ.பழனிச்சாமி அவர்கள் 02.04.2017 அன்று 822/10K போயம்பாளையம் பிரிவு, பிச்சம்பாளையம் புதூர் பி.என்.ரோடு, திருப்பூர் 641601 முகவரியில் இறந்ததை, எதிர்மனுதாரர் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி உயர்திரு. ஆணையாளர் அவர்கள் திருப்பூர் மாநகராட்சி மனுத்தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் சமூக நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

**ஆனந்தி**
**மனுதாரர்**

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000